www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது




# நான்கு நாள் சமர் முப்படைகளும் களத்தில்!

சிலாவத்துறை இராணுவ முகாமை கைப்பற்றும் புலிகளது தாக்குதல் இரண்டாம் நாளும் தொடர்ந்தது.

முதல் நாள் தாக்குதலில் உதவி அரச அதிபர் விடுதியில் இருந்த மினி முகாமை புலிகள் கைப்பற்றியிருந்தனரல்லவா.

இரண்டாம் நாள் விடிந்ததும் பாடசாலையில் இருந்த மினி முகாமை கைப்பற்றும் தாக்குதல்களில் இறங்கினார்கள்.

சிலாவத்துறை பிரதான இராணுவ முகாமுக்குள் புலிகளின் முற்றுகையில் இருந்த இராணுவத்தினருக்கு உதவ விமானப் படையினர் தொடர் குண்டு பொழிதலில் ஈடுபட்டிருந்தனர்.

குண்டுகள் முடிந்ததும் அவற்றை நிரப்பிக்கொண்டு வருவதற்காக அநுராதபுர விமானத்தளத்திற்கு விமானங்கள் போவதும் வருவதுமாக இருந்தன.

கடலில் இருந்தும் சிலாவத்துறை முகாமுக்கு உதவி வழங்க கடற்படைக் கப்பல்கள் விரைந்து வந்தன.

கடல் மூலம் துருப்புக்களை இறக்கி சிலாவத்துறை முகாமுக்கு மேலதிக ஆளணியையும், ஆயுதங்களையும் அனுப்ப திட்டமிட்டனர்.

## தரையிறக்கம்

இரண்டாம் நாள் பிற்பகல் ஒருமணியளவில் இரண்டு பாரிய கப்பல்கள் கடற்பரப்பில் தோன்றின.

கடலில் இருந்து உதவிகள் வரும் என்று முன்கூட்டியே ஊகித்து புலிகளின் அணிகள் கடற்கரையோரமாக நிறுத்தப்பட்டிருந்தன.

கடற் படையினரின் தரை இறக்க முயற்சியை முறியடிக்க அந்த அணிகள் தயாராகின.

போதிய தடுப்பு அரண்கள் இல்லாத கடற்கரைப் பகுதியில் நின்று போரிடுவது புலிகளின் அணிகளுக்கு கடினமாக இருந்தது.

கடற்கரை ஓரமாக உரு மறைப்பு செய்து கலிபர் துப்பாக்கிகளை நிறுத்திவைத்திருந்தனர். கடலையே பார்த்துக்கொண்டிருந்த கலிபர் துப்பாக்கிகள், கடற் படை படகுகள் கரையை நெருங்க முற்பட்டதும், ரவைகளை பொழியத் தொடங்கின.

50 கலிபர் ரக துப்பாக்கிகளும், 30 கலிபர் ரக துப்பாக்கிகளும் சரமாரியாக ரவைகளைப் பொழிந்ததால் தரை இறக்க முயற்சி பலனளிக்கவில்லை.

மீண்டும் மாலை 5.30 மணியளவில் தரை இறக்க முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டனர்.

கடற்கரைப் பக்கமாக விமானக் குண்டு வீச்சு நடத்தி புலியணிகளை களத்தைவிட்டு அகற்றும் நேரத்தில், கடற்படையினர் தரையிறங்கிவிடலாம் என்று திட்டமிடப்பட்டது.

ஆனால், மண்ணோடு மண்ணாக ஒட்டிக்கிடந்தும், உரு மறைப்பு உத்திகளைப் பயன்படுத்தியும் புலிகள் தரையிறக்க முயற்சியை தடுத்து நிறுத்தினார்கள்.

அதனால் இரண்டாவது முயற்சியும் கைவிடப்பட்டது.

இரண்டாவது நாள் இரவும் நெருங்கிக் கொண்டிருந்தது. சண்டை முடிந்தபாடாக இல்லை.

வெளிச்சக் குண்டுகளின் உதவியுடன் புலியணிகளை தேடிக்கொண்டிருந்தன போர் விமானங்கள்.

பாடசாலை முகாமை புலிகள் கைப்பற்றாமல் தடுக்கும் விதமாக குண்டுகள் மூலம் தடையரண் ஒன்றை அமைக்கும் உத்தியை கடற்படையினர் செயற்படுத்த தொடங்கினார்கள்.

அது என்ன குண்டுகள் மூலம் தடையரண் அமைக்கும் உத்தி?

பாடசாலை மினி முகாமுக்குள் உள்ள படையினருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, அம் முகாமை சுற்றிய பகுதிகளை நோக்கி கடற்படை படகுகளில் இருந்து பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்டன.

விமானப் படையினரும் குண்டுகளை அப்படியே விதைத்துக் கொண்டிருந்தனர்.

புலியணிகள் மினி முகாமை நோக்கி முன்னேற முடியாமல் குறுக்கே தடையாக குண்டுகள் இறங்கிக் கொண்டிருந்தன.

முப்படைகளது போர் வியூகங்கள் மத்தியில் நின்று புலியணிகளை சண்டையிட்டு கொண்டிருந்தனர்.

புலியணிகளை தமிழ்ச் செல்வன் (தினேஷ்) வழி நடத்திக் கொண்டிருந்தார்.

குண்டுகள் பொழிந்து கொண்டிருந்த போதும், அதி வேகமாக நகர்ந்து பாடசாலை மினி முகாமுக்குள் புகுந்தனர் புலிகள். அப்போது நள்ளிரவாகியிருந்தது.

இம் முகாமை நோக்கி புலிகள் முன்னேறியபோது படையினர் கடும் பதிற் தாக்குதல் நடத்தினார்கள்.

காவலரண்களில் இருந்து கைக்குண்டுகளும், துப்பாக்கிகள் கக்கிய ரவைகளும் புலிகளை நோக்கி ஏராளமாக பறந்து வந்தன.

நள்ளிரவுக்கு முன்னால் மினி முகாமை எப்படியாவது கைப்பற்றியாக வேண்டும் என்று திட்டவட்டமான கட்டளை புலிகளுக்கு பிறப்பிக்கப்பட்டது.

கடும் மூர்க்கமாக சண்டையிட்டே பாடசாலை முகாமை புலிகள் கைப்பற்றினார்கள்.

அங்கு சண்டையில் பலியான படையினர் தவிர, ஏனைய படையினர் பிரதான முகாம் நோக்கி பின்வாங்கி அங்கிருந்து பதிற் தாக்குதலில் ஈடுபட்டனர்.

## மூன்றாம் நாள்

மூன்றாம் நாள் காலையும் சண்டை முழக்கங்களுடன் விடிந்தது.

நான்கு முனைகளில் புலிகள் சண்டையிட வேண்டியிருந்தது.

1. **சிலாவத்துறை முகாம்மீதான போர் முனை.**
2. **கொண்டைச்சி கொக்குப்புடையான் இராணுவத்தை வழிமறிக்கும் போர்முனை.**
3. **சிலாவத்துறை கடற் போர் முனை.**
4. **வங்காலை தள்ளாடி போர் முனை.**

இந்த நான்கு முனைகளுமே சண்டையின் வெற்றி தோல்விக்கு முக்கியமானவை. இதில் ஒரு முனையில் தோல்வி கண்டால்கூட புலிகளது பிரதான நோக்கம் கைக்கெட்டாது.

இதேவேளை படைத்தரப்பு உயரதிகாரிகள் கொழும்பில் கூடி ஆராய்ந்தனர். சிலாவத்துறை பிரதான முகாமை எப்பாடுபட்டாயினும் பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.

ஏற்கனவே மாங்குளம் முகாமை பறிகொடுத்தாகிவிட்டது. சிலாவத்துறையையும் இழந்தால் எதிர்க்கட்சி கைகொட்டி நகைக்கும் என்ற கவலை அரசாங்கத்திற்கு.

படை உயரதிகாரிகள் கூடி திட்டம் ஒன்றை வகுத்தனர்.

சிலாவத்துறை முகாம் முற்றுகையை உடைக்க வேண்டுமானால், அங்குள்ள படையினரின் பலம் போதாது.

வெளியே இருந்து முன்னேறி புலிகளின் முற்றுகையை உடைத்து முகாமை காப்பாற்ற வேண்டும்.

கடற்பகுதியூடாக தரையிறக்கமும் சாத்தியமில்லை. ஆகவே கொண்டைச்சி இராணுவ முகாமில் இருந்து பாரிய படை நகர்வு ஒன்றை நடத்தியாக வேண்டும் என்று முடிவு செய்தனர்.

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து இரண்டு ஹெலிகொப்டர்கள் மூலம் 20 தட வைக்கு மேல் படையினர் கொண்டு செல்லப்பட்டு கொண்டைச்சி முகாமில் குவிக்கப்பட்டனர்.

கடலிலும் பாரிய கடற்படை போர்க் கப்பல் ஒன்று வந்து நின்றது. அத்தோடு சேர்த்து மொத்தம் மூன்று போர்க்கப்பல்களும், பத்துப்பீரங்கிப் படகுகளும், விசைப்படகுகள் பலவும் கடலில் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் இருந்து பீரங்கிக் குண்டுகள் தரையை நோக்கி ஏவப்பட்டுக் கொண்டிருந்தன.

கொண்டைச்சி முகாமில் இருந்து முன்னேறும் படையினருக்கு தரைப்பாதையை சுத்தம் பண்ணிக்கொடுக்கும் விதமாக, அப்பகுதிகளில் நிலை கொண்டிருந்த புலியணிகளை குறிவைத்து பீரங்கிக் குண்டுகள் பொழியப்பட்டன. விமானப் படையினரும் படை நகர்வுக்கு பாதையை செப்பனிடும் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர்.

கொண்டைச்சி முகாமில் இருந்து தம்பலத்தை ஒன்றுகுவித்தபடி படையினர் முன்னேற ஆரம்பித்தனர்.


இப்போது புலியணிகளுக்கு பிரதான முனையாக கொண்டைச்சி படையை தடுக்கும் முனை மாறியது.

முன்னேறிவரும் படையை தடுத்து திருப்பி அனுப்பாவிட்டால் முகாம் தாக்குதல் பூரணமாகாது.

ஆகையால், கொண்டைச்சி கொக்குபுடையான் முனையில் சண்டை தீவிரமானது.

எங்கும் ஒரே புகைமண்டலம். குண்டுச் சத்தங்கள் அப் பகுதியை உலுக்கிக்கொண்டிருந்தது.

தமக்கு சாதகமில்லாத தரையமைப்பில் புலிகள் சண்டை போடவேண்டியிருந்தது. காயமடைந்த உறுப்பினர்களை விரைவாக மீட்டெடுத்து அனுப்பிக்கொண்டே சண்டையிட்டபடி இருந்தனர்.






கொக்குபடையான் படையினரை தடுத்து நிறுத்தும் புலியணிகளை திசைதிருப்ப வங்காலை, தள்ளாடி போர் முனையை திறந்தனர் படையினர்.

அங்கிருந்து சிலாவத்துறை நோக்கி படைகள் முன்னேற ஆரம்பித்தன.

அங்கு புலிகளுக்கு சாதகமான நிலை இருந்தமையால் படையினரால் முன்னேற முடியவில்லை தடுத்து நிறுத்தப்பட்டனர்.

## நான்காம் நாள்

மூன்றாம் நாள் சண்டையில் 17 புலிகள் பலியாகினர். நான்காம் நாள் காலையும் போர் எழுப்பிய புகைமண்டலத்தோடு விடிந்தது.

மூன்று நாட்கள் தூக்கமே இல்லாமல் புலியணிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

நான்காம் நாள் கொண்டைச்சி முகாம் படையினர் தமது முன்னேற்ற முயற்சியை வெகு தீவிரமாக்கினர். வான் படையின் போதிய பக்கபலத்துடன் முன்னேறினர்.

அவ்வாறு முன்னேறியும் புலிகள் தடுத்து சண்டையிட்டதால் தமது உத்தியை திடீரென்று மாற்றியது படைத்தரப்பு.

நேராக முன்னேறாமல் கடற் கரை நோக்கி திரும்பிய படை யினர், கடற்கரையை அண்டிய பாதையால் சிலாவத்துறை முகாம் நோக்கி முன்னேறத் தொடங்கினர்.

கடற்கரைப்பகுதி வெட்ட வெளி என்பதால் புலியணிகளுக்கு பதுங்குநிலை எடுத்து தாக்குப்பிடிப்பது கஷ்டம். தவிர கடற்படை கப்பல்களும், வான் படையும் பக்கபலமாக செயற்பட்டன.

இந்த உத்தி பயனளிக்க ஆரம்பித்தது. புலியணிகள் முன்பு போல கடும் தடுப்புச் செய்யக் கூடிய கள நிலவரம் இருக்கவில்லை.

விமானக் குண்டுகள் சில புலியணிகள் மத்தியில் விழுந்து வெடித்தன. பீப்பாய் குண்டுகளும் அவ்வாறு விழுந்து வெடித்தன.

மேலும் அப் பகுதியில் நின்று சண்டையிடுவது தமது அணிகளுக்கு கடும் சேதத்தை உண்டாக்கும் என்பதால், களத்தை விட்டு அகலுமாறு புலியணிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

நான்காம் நாள் சண்டையில் நண்பகல் வரை 21 புலிகள் பலியாகினர். அந்த உடல்களை கடந்து படையினர் சிலாவத்துறை முகாமுக்குள் சென்றனர்.

சிலாவத்துறை முகாமுக்கு மேலதிக ஆட்பலமும், ஆயுத தளபாடங்களும் சேர்ந்துவிட்டன.

ஆகவே, பிரதான முகாமை கைப்பற்ற போரிட்டால் பாரிய உயிரிழப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

முகாம் முற்றுகையை கைவிட்டு தாக்குதலுக்காக கொண்டுவரப்பட்ட ஆயுத தளபாடங்களுடன் புலியணிகள் திரும்பிச் சென்றன.

கடற்புலிகள் அணி அப்போது பலமான நிலையில் இருக்கவில்லை. விமான எதிர்ப்புப் படையணியும் பலமாக இருக்கவில்லை. சண்டையில் புலிகள் தரப்பு இலக்கை எட்டமுடியாதுக்கு அவையும் பிரதான காரணிகள்.

முப்படை பலத்தையும் போதியளவு பிரயோகித்து படைத்தரப்பு புலிகளது முற்றுகையை முறியடிப்பதில் வெற்றி பெற்றது.

அதே சமயம் புலிகளுக்கு நீண்ட முற்றுகைச் சமர் அனுபவமும், ஒரே தருணத்தில் முப்படைகளையும் எதிர்த்து சண்டையிடும் கள அனுபவமும் கிடைத்தது.

## கடும் சண்டை

நான்கு நாள் சமரை முன்நின்று நடாத்திய புலிகளது அன்றைய யாழ் மாவட்டத் தளபதி தமிழ்ச் செல்வன் (இப்போது இவர்தான் புலிகளது அரசியல் பிரிவின் பொறுப்பாளராக இருக்கிறார்) சமர் பற்றி பின்வருமாறு கூறியிருந்தார்.

"இது போன்றதொரு நீண்டதும் கடுமையானதுமான சண்டையை இதுவரை நான் சந்திக்கவில்லை.

யாழ் கோட்டை முகாமை எமது முற்றுகைக்குள் வைத்திருந்த 107 நாட்களிலும் அதன் சுற்றாடலில் வீசப்பட்ட குண்டுகளின் தொகைக்கு இணையாக இந்த நான்கு நாட்போரிலும் சிலாவத்துறையில் குண்டுகள் வீசப்பட்டன!"

சிலாவத்துறை சமருக்கு திட்டமிட்டு தலைமை தாங்கிய புலிகளது தளபதிகளில் ஒருவர் மன்னார் மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்த சுபன்.

சமர் முடிந்த பின்னர் சுபன் கூறும் போது:

"தாக்குதலுக்கு செல்லும்போது நாம் சவப்பெட்டிகளுடன் தான் செல்கிறோம்!" என்று கூறியிருந்தார்.

சிலாவத்துறை முகாமின் முக்கியத்துவம் பற்றி புலிகள் இன்னொரு கருத்தையும் புலிகள் கூறியிருந்தனர்.

"குடியேற்றவாத நோக்கில் சிலாவத் துறை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. மன்னார் மாவட்டத்தின் தென் பகுதியை விழுங்கும் திட்டத்தை செயற்படுத்த அமைக்கப்பட்ட முகாமே இது. ஆறு கிலோமீட்டர் இடைத்தூரம் கொண்ட சிலாவத்துறை கொண்டைச்சிப் பகுதியை இணைத்து இராணுவ வலயமாக்கிவிட்டு அதன் கீழ்ப்புறம் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றம் நடத்துவதே திட்டம்!" என்று கூறியிருந்தனர் புலிகள்.

சிலாவத்துறை சமரில் 79 புலிகள் பலியாகினர்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்